**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**MCOP.NO.213/2012** **தேதி.**10.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 3 திருமதி. மகாலட்சுமி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... எ.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 10.02.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.இளம்பருதி |
| த/பெ. | திரு.இராதாகிருஷ்ணன் |
| வயது | 35/2026 |

துவக்க நேரம் 1.40 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக தெரியாது என்றால் சரிதான், கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான், இந்த வழக்கில் ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆவணங்கள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். மோட்டார் வாகன ஆய்வறிக்கை (ம.த.சா.ஆ.5)யில் வாகனத்தை இயக்கிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதாகவும், வாகனத்திற்கு FC, PERMIT CERTIFICATE, INSURANCE ஆகியவை விபத்து சமயத்தில் நடைமுறையில் இருந்ததாக மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அந்த விபத்துக்குள்ளான வாகனத்தை ஓட்டுவதற்கு உண்டான ஓட்டுநர் உரிமம் வாகனம் ஓட்டிய நபருக்கு இல்லை.

2. முதல் தகவல் அறிக்கையில், மருதாலத்திலிருந்து சென்னை கோயம்பேட்டிற்கு, காய்கறி ஏற்றிக்கொண்டு TN 23 AP 5584 என்ற விபத்தில் தொடர்புடைய வாகனம் சென்றது என்றால் சரிதான், இந்த

வாகனத்தில் சுந்தரமூர்த்தி, மணி, சேகர், விஸ்வநாதன், பாண்டியன் ஆகியோர்கள் அவர்களின் காய்கறிகளை ஏற்றிக்கொண்டு, காய்கறிகளின் உரிமையாளர்களாக அந்த வாகனத்தில் பயணித்தார்கள் என்றால் சரியல்ல, மேற்படி நபர்கள் அங்கீகரிக்கப்படாத பயணிகனாளத்தான் வாகனத்தின் பின்பகுதியில் அமர்ந்து பயணித்துள்ளார்கள்.

3. இவ்வழக்கின் மனுதாரர், அவருடைய காய்கறிகளை ஏற்றிக்கொண்டு, காய்கறி உரிமையாளராக இந்த வானத்தில் சென்றுள்ளார் என்றாலும், இந்த வாகனம் விபத்தில் சிக்கி அதனால் மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதற்கு எங்கள் காப்பீட்டு நிறுவனம்தான் பொறுப்பு என்றாலும், எங்கள் நிறுவனம்தான் இழப்பீடு தொகை கொடுக்கவேண்டு என்றாலும் சரியல்ல.

4. இந்த விபத்து, ஓட்டுநரின் அதிவேகத்தாலும், கவனக்குறைவாலும்தான் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தில் தொடர்புடைய வாகனத்திற்கு கூட்டுக்காப்பீடு(Package policy) எடுக்கப்பட்டள்ளது என்றால் சரிதான். எனவே, எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 1.55 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.